**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.24/2024 - PW-3**

| | |
|---|---|
| Name | திரு. தேன்மொழி |
| Husband/Father Name | கிருஷ்ணன் |
| Village /Area | கண்டிகை சயினபுரம் |
| Taluk | நெமிலி |
| Occupation | இல்லத்தரசி |
| Age | 52 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 02.07.2025.

**(எதிரிகள் 1 முதல் 4 வரை ஆஜர். எதிரி 5 கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை :**

எதிரிகள் வீட்டருகே வேகத் தடை அமைத்திருந்தனர். இதில் பல பேருக்கு காயம் ஏற்பட்டது. இது சம்பந்தமாக யாராவது கேட்க சென்றால் அசிங்கமாக அவர்களை பேசுவார்கள். 26.02.2016 அன்று மதியம் 02.30 மணியளவில் எனது மூத்தார் மகன் தனசேகர் வேலைக்கு சென்று வந்திருந்தார். வேகத்தடையில் தடுக்கி தனசேகர் கீழே விழுந்து விட்டார் இது குறித்து கேட்பதற்காக அவரது வீட்டிற்கு சென்றார் அப்போது தனசேகர் அவர்களை கேட்டுக்கொண்டிருந்தார் சத்தம் கேட்டு நானும் எனது கணவரும் அங்கு சென்றோம், அப்போது அவர்கள் கோத்தா தெவிடியா பைய்யா இதே வேலையா உங்களுக்கு என்று கேட்டு அருண், ஆனந்த் ஆகியோர்கள் தனசேகரையும் எனது கணவரையும் கத்தியால் குத்தினார்கள். தனசேகரை கத்தியால் குத்தியது அருண், ஆனந்த் எனது கணவரை மணி என்பவர் கத்தியால் குத்தினார். யசோதா என்பவர் எனது முடியை பிடித்துக்கொண்டார்,

அருண் என்பவர் எனது வலது கையை கத்தியால் குத்தி கிழித்தார் சாட்சியின் வலது கையில் கத்தியால் குத்தியதால் ஏற்பட்ட காயத்தை நீதிமன்றத்தில் அடையாளம் காண்பித்தார். காயம் பட்ட நாங்கள் புன்னை அரசு மருத்துவமனைக்கு சென்று முதலுதவி சிகிச்சை பெற்றோம். எனது மூத்தார் அதசா.1 உடன் நானும் எனது கணவரும் அரக்கோணம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு சிகிச்சை முடிந்து மேல் சிகிச்சைக்காக சென்னை அரசு மருத்துவமனைக்கு சென்றோம். எனது மூத்தார் மகன் தனசேகரன் என்பரை அவரது தாயாரும் உறவினரும் அங்கிருந்து சென்னை ஸ்டேன்லி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். அவரை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் வரும் வழியிலேயே இறந்து விட்டதாக கூறினார்கள். எனது கணவரை கத்தியால் இடது கை தோல்பட்டை அருகே குத்திவிட்டார்கள் மேற்படி சம்பவத்திற்கு 6 மாதத்திற்கு பிறகு எனது கணவர் இறந்து விட்டார். போலீசார் மருத்துவமனைக்கு வந்து விசாரணை செய்தார்கள் மேலும் மருத்துவமனையில் போலீசார் எங்களுக்கு பாதுகாப்பு அளித்தனர். மேலும் அக்கம்பக்கதில் உள்ளவர்கள் எனது மகனுக்கு எதிரிகளால் ஆபத்து இருப்பதாகவும் அதனால் எனது மகனை பாதுகாப்பாக இருக்குமாறு கூறுகிறார்கள். எனது மகனுக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டால் அதற்கு எதிரிகள் தான் காரணம்.

மனுவின் பேரில் குறுக்கு விசாரணைக்காக நிறுத்திவைக்கப்படுகிறது.

**ஒம்./–திருமதி.கே.எஸ்.ஜெயமங்களம்,**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**அரக்கோணம்.**